வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 02.09.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 245 | பக்கங்கள் : 08

# செம்மணி மனித புதைகுழி குறித்து வெளிப்படையான விசாரணைகள்

## யாழ்ப்பாணத்தில் கூறினார் ஜனாதிபதி அநுரகுமார



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 02

**இப்போது செம்மணி பகுதியில் உள்ள புதைகுழிகள் குறித்து மிகவும் வெளிப்படையான விசாரணைகளை நடத்தி வருகிறோம். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற புதைகுழிகள் மீண்டும் உருவாகாத நாட்டை உருவாக்குவதே எங்கள் எதிர்பார்ப்பாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசாங்கத்தின் முன்னுரிமைத் திட்டமாக டிஜிற்றல் மயமாக்கலுடன், இவ்வளவு காலமும் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் தொலைதூர கிராமங்களுக்குப் பரவலாக்கப்பட்டு, அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பணிகளை, மிக நெருக்கமாக பெற்றுக் கொள்ள மக்களுக்கு

11

# கருத்தியல் ரீதியாக புலிகள் தோற்கடிக்கப்படவில்லை!



**கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ**

கொழும்பு, செப். 02

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இன்னும் கருத்தியல் ரீதியில் தோற்கடிக்கப்படவில்லை." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

11

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் நேற்று 9 எலும்புக்கூடுகள் அடையாளம்!

- இ. ராஜ்குமார், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 02

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்று 7 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 9 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று 8ஆவது நாளாகவும் அகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

11

# கச்சத்தீவு சென்றார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கச்சதீவுக்கும் அவசர பயணம் மேற்கொண்டார்.

வடக்குக்கு இரு நாள் பயணமாக நேற்று வருகை தந்த ஜனாதிபதி, நேற்று மாலை 5 மணியளவில்

11

# வடக்கில் படைகள் கையகப்படுத்திய மக்களின் காணிகள் விடுவிக்கப்படும்

## மயிலிட்டியில் கூறினார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 02

கடந்த போரின்போது படையினரின் பயன்பாட்டுக்காக கையகப்படுத்தப்பட்ட வடக்கில் விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளும் மக்களுக்காக விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை



ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்றுக் காலை கலந்து கொண்டு உரையாற்றும்

11

# யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்; ஜனாதிபதி நேற்று அடிக்கல் நாட்டினார்

யாழ்ப்பாணம், செப். 02

மண்டைதீவில் அமைக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று இடம் பெற்றது.

இவ்விழாவில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் ஷம்மி சில்வா, விளையாட்டுத் துறை அமைச்சர்

11



# ரயில் விபத்தில் மூவர் காயம்

வவுனியா, செப். 02

வவுனியாவில் இடம் பெற்ற ரயில் விபத்தில் 4 வயது குழந்தை உட்பட மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

11

# ஒன்றுகூடிய பொதுமக்களை விரட்டியடித்தனர் பொலிஸார்

## மயிலிட்டியில் நேற்று பரபரப்பு

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணம் மயிலிட்டி பகுதியில் நேற்று காலை ஒன்றுகூடிய காணி உரிமையாளர்களையும் அதனை செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களையும் பொலிஸார் விரட்டியடித்தனர்.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் பகுதியில் அபிவிருத்தி பணிக்கான அடிக்கலை நாட்டுவதற்காக ஜனாதிபதி அநுரகுமார வருகை தந்தார்.

இதன்போது அப்பகுதியில் கூடிய காணி

11



# யாழில் மின் நூலகம் திட்டத்தை ஜனாதிபதி தொடக்கி வைத்தார்

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணம் பொது நூலகத்தை மின் நூலகமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாண பொது நூலகத்திற்காக jaffna.dlp.gov.lk என்ற இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் யாழ்ப்பாண பொது நூலகத்தில் உள்ள புத்தகங்களை ஒன்லைன் ஊடாக வாசிக்க வாய்ப்பளிக்கும்.

யாழ்ப்பாண மக்களின் பெருமையின் அடையாளமாக விளங்கும் யாழ்ப்பாண பொது

11

# மகிந்தவை 400 ஆண்டுகள் சிறையில் வைக்கவேண்டும்

## சரத் பொன்சேகா ஆதங்கம்

கொழும்பு, செப். 02

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளார்.

2010இல் ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கடுமையான ஊழல் மற்றும் அரசியல் முறைகேடுகளையும் வன்மையாக கண்டித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய இலங்கைத்

11

# மதகுருமார் வர வேண்டாம் கெஞ்சிய அரச அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செப். 02

மயிலிட்டியில் ஜனாதிபதி கலந்துகொண்ட நிகழ்வில் மதகுருமார்கள் கலந்து கொள்ளவில்லை.

மயிலிட்டித்துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மயிலிட்டி இறங்குதுறை அதிகாரிகளால், நிகழ்வுக்கு வருமாறு அப்பகுதி இந்து மதகுரு மற்றும் கிறிஸ்தவ அருட்தந்தைக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன் தினம் மதகுருமார்களை சந்தித்த அதிகாரிகள், நிகழ்வுக்கு வர வேண்டாம் என கோரியுள்ளனர்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப். 02

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடாத்தப்பட்டுவருகின்ற யோகக் கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரதி சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்ட மைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-02)

## சில பகுதிகளில் அதிக வெப்பம்!

கொழும்பு, செப். 02

நாட்டின் சில பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி முதலைப்பாலை, பலகொல்லாகம, இராஜாங்கனை, எப்பாவல, மெதிரிகிரிய, பள்ளித்திடல் மற்றும் வாகரை ஆகிய பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுகிறது.

அதிக வெப்பமான கால நிலை நிலவும் போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (அ)

## பூநகரி வாடியடியில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!



கிளிநொச்சி, செப். 02

கிளிநாச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கௌதாரிமுனை - வெட்டுக்காடு பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி பிரதேச மக்கள் நேற்று வாடியடிப் பகுதியில் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கௌதாரிமுனை, மண்ணித்தலை, வினாசியோடை ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி இன்று வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

வெட்டுக்காடு செல்லும் 5 கிலோ மீற்றர் நீளமான வீதி, மக்கள் பயணிக்க முடியாத நிலையில் மணல் பாதையாக காணப்படுகிறது.

இதனால், வீதியை பயன்படுத்தும் மக்களும் மாணவர்களும், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதனையடுத்து நேற்று வீதியை புனரமைத்து தருமாறு கோரி, பூநகரி வாடியடியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச சபை, கமநல சேவை நிலையம், நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை அலுவலகம் ஆகியவற்றுக்குச் செல்லும் பிரதான வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அரச உத்தியோகத்தர்கள் கடமைக்கு செல்லாது நீண்ட நேரம் காத்திருந்து போராட்டம் முடிவுற்ற பின்னரே கடமைக்கு சென்றிருந்தனர். (அ)

## சஞ்சீவ கொலைக்கு உதவியவரான இஷாரா நாட்டை விட்டு தப்பித்தார்

### குற்றப் புலனாய்வு பிரிவு தகவல்

கொழும்பு, செப். 02

கடந்த பெப்ரவரி 19 அன்று வாழைத்தோட்டம் நீதிமன்ற வளாகத்திற்குள் பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரும் போதைப்பொருள் கடத்தல் காரருமான கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்டதற்கு உதவியதாகக் கூறப்படும் தப்பியோடிய பெண் இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் அண்மையில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட கெஹல்பத்தர பத்மே மற்றும் பிறரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது இந்த தகவல் தெரியவந்ததாக சி.ஐ.டி. தெரிவித்துள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களை குறிவைத்து இலங்கை பொலிஸார், இந்தோனேசிய பொலிஸார் மற்றும் இன்ரர்போல் நடத்திய கூட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தக் கைதுகள் நடந்தன.

கெஹல்பத்தர பத்மே, கொமாண்டோ சாலிந்த மற்றும் பேக்கோ சமன் உள்ளிட்ட குழுவினர் தற்போது 72 மணி நேர தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரிக்கப்படுகிறார்கள்.

## வெளிநாடு அனுப்புவதாக கூறி 10 இலட்சம் ரூபா நிதி மோசடி!

### மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 10 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்த நபருக்கு எதிராக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை - மாவிட்டபுரம் பகுதியைச் சேர்ந்த நபரே சங்கானையை சேர்ந்த ஒருவரை பிரான்ஸுக்கு அனுப்புவதாகக் கூறி 13 இலட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார். அவரை பிரான்ஸுக்கு அனுப்பாத நிலையில் 3 இலட்சம் ரூபாவை திருப்பிக் கொடுத்ததுடன் 10 இலட்சம் ரூபா இன்னமும் கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட நபர் இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். சந்தேகநபரை மானிப்பாய் பொலிஸார் தேடி வருகின்றனர். (அ)

## இந்திய மீனவர்கள் நால்வருக்கு மறியல் 11ஆம் திகதி வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 02

எல்லை தாண்டி இலங்கையின் நெடுந்தீவு கடற்பரப்புக்குள் உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் நால்வருக்கும் மீண்டும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்களுக்கு ஏற்கனவே இரண்டு தடவைகள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் அவர்களது வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது தடவையாகவும் அவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. அவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-05)

## கிராமப்புற பாடசாலை சாதனை



யாழ்ப்பாணம், செப். 02

தீவக வலயத்தின் வியாவில் சைவ வித்தியாலயம் மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் பல பதக்கங்களையும் அதிகூடிய புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலை பொருளாதார ரீதியாக நலிவுற்ற மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையாக காணப்படுகின்றது.

அந்தவகையில் குறித்த பாடசாலைக்கு 12 வயதுக்குட்பட்ட பெண்கள் அணியினருக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கம் ஒன்றும் வெண்கலப் பதக்கம் ஒன்றும் கிடைத்துள்ளது. அதுபோல 4X50 மீற்றர் அஞ்சல் போட்டியில் தங்கப்பதக்கம் ஒன்று கிடைத்துள்ளது. மேலும் நீளம் பாய்தலில் ஒரு வெண்கல பதக்கமும், 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் ஒன்றும் பெற்றுள்ளது.

அத்துடன் 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான அஞ்சலோட்ட போட்டியில் 40 புள்ளிகளை பெற்று குறித்த பாடசாலை முதலாம் இடத்தையும், 26 புள்ளிகளை பெற்று மன்னார் கற்கிடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை இரண்டாவது இடத்தையும், 10 புள்ளிகளை பெற்று மன்னார் சென். ஜோசப் மகா வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. (அ-05)


## இனப்படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் தென்மராட்சியில்!

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி உட்பட, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்று தென்மராட்சியில் முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகரங்களில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரில், நகர சபைத் தவிசாளர் தலைவர் வ. சிறிபிரகாஸும் கொடிகாமம்



பிரதேசத்தில், பிரதேச சபை தவிசாளர் குகதாசனும் கையெழுத்து போராட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இதில் சாவகச்சேரி வணிகர் கழகத்தினர், முச்சக்கரவண்டிச் சங்கத்தினர், சந்தை வியாபாரிகள் சங்கத்தினர், பொது மக்கள் எனப்பலர் பங்கேற்று கையெழுத்திட்டனர்.

## ரணிலின் அமைச்சரவைக்கு எதிரான மனு; விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, செப். 02

குறைந்த விலைக்கு பொசுபேற்றுகளை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது முன்னாள் அமைச்சரவை உறுப்பினர்கள் பலருக்கு எதிரான மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

எப்பாவல பொசுபேற்று சேமிப்பகத்திலிருந்து முந்தைய அரசாங்கத்துடன் நெருங்கிய உறவுகளைக் கொண்ட பல நிறுவனங்களுக்கு, ஏற்றுமதிக்கான நிலையான விலையை விடக் குறைந்த விலையில் பொசுபேற்றுகளை வழங்கியதாக குற்றம் சாட்டி, குறித்த தரப்பினருக்கு எதிராக இந்த அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.09.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இதுதான் அதிகார உலகத்தின் இன்னொருமுகம்

உலக அதிகார அரசியல் என்பது ஒரு விடயத்தில் எத்தனை நாடுகள் ஒன்றாக நிற்கின்றன என்பதல்ல. மாறாக, உலகின் மிகவும் பலமான நாடுகள் எந்தப் பக்கத்தில் இருக்கின்றன என்பதைக் கொண்டுதான் அதிகாரத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். பலஸ்தீன விவகாரம் இதற்கு மிகவும் சிறந்த உதாரணமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் பங்கு கொள்வதற்கு அமெரிக்கா தடை விதித்திருக்கிறது.

பலஸ்தீனத்தை ஒரு தனிநாடாக அங்கீகரிக்கப் போவதாக பிரான்ஸ் அறிவித்திருந்தநிலையில், அந்த விடயம் கலந்துரையாடப்படவிருந்த நிலையில்தான் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பலஸ்தீன ஜனாதிபதியின் பங்குபற்றலை அமெரிக்கா தடுத்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடர் நியூயோர்க்கில் நடைபெறுகின்றநிலையில் அமெரிக்கா அனுமதித்தால் மட்டும்தான் ஜனாதிபதி அப்பாஸ் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குகொள்ளமுடியும்.

இந்த இடத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான பேச்சின்போது வாஷிங்டன் கொடை வழங்குநர் மகாநாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பு பங்குகொள்வதற்கு அமெரிக்கா தடை விதித்திருந்தது. பலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகள் சபை ஒரு தேசமாக அங்கீகரித்திருக்கிறது. அங்கு தேர்தல்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கம் இருக்கிறது. ஆனால், மக்களால் தெரிவுசெய்யப்பட்டவரே ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குகொள்ள முடியவில்லை.

இப்போதாவது உலக அரசியல் விளங்குகிறதா? ஹர்த்தால், காட்போர்ட் எதிர்ப்பு, கையெழுத்து சேகரிப்பு என்பவற்றின் மூலம்தான் உங்களை நோக்கி உலகம் திரும்புமென்று நீங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் 147 நாடுகள் பலஸ்தீனத்தை அங்கீகரித்திருக்கின்றன. இதில் இலங்கையும் ஒன்று.

ஆனால், என்ன செய்யமுடிந்தது? இந்த விடயத்தில் அமெரிக்காவின் கடைக்கண் பார்வையின்றி எதனையும் எவராலும் செய்யமுடியாமல் இருக்கிறது என்றால், இதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்ன? ஐக்கிய நாடுகள் சபையும் தமிழர்களும் என்னும் தலைப்பில் கடந்த பதினாறு வருடங்களாக உரைகள் ஆற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், அவ்வாறு உரையாற்றுபவர்களால் ஆகக் குறைந்தது உலக அரசியலின் அரிச்சுவடியைக்கூட புரிந்துகொள்ளமுடியவில்லை.

147 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனத்தின் நிலைமை இதுவென்றால், எந்தவொரு நாடும் ஏறெடுத்தும் பார்க்காத - அவ்வாறு பார்ப்பதற்கும் ஆளாலில்லாத ஈழத் தமிழர்களை நோக்கி உலகம் திரும்புமென்று எண்ணுவதானது எந்தளவு சிறுபிள்ளைத்தனமானது. இதனோடு ஒப்பிட்டால் ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பை வாஷிங்டன் மகாநாட்டில் பங்குகொள்ள விடாது தடுத்ததில் என்ன ஆச்சரியமுண்டு.

இந்த இடத்தில்தான் யூதர்களின் தனித்துவமான 'லொபி'யை எண்ணிப் பார்க்கவேண்டும். நமது புலம்பெயர் அமைப்புகளும் சர்வதேச விசாரணையை முன்வைத்து மேற்கு நாடுகளில் லொபியை முன்னெடுத்து வருவதாகக் கூறுகின்றன. ஆனாலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரோ பதினாறு வருடங்களுக்குப் பின்னரும் உளளக விசாரணை பற்றியே பேசுகிறார். அவ்வாறாயின், புலம்பெயர் லொபியின் பொருள் என்ன? உண்மையில் இங்கு லொபி அல்ல பிரச்னை. முதலில் உலக அதிகார அரசியலைப் புரிந்துகொள்ள முடிகிறதா என்பதுதான் பிரச்னையாகும். அதனைப் புரிந்துகொள்ளாமல் மேற்கொள்ளப்படும் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகவே கடந்து போகும்.

# ஆப்கன் நிலநடுக்கத்தில் 622 பேர் பலி!



காபூல், செப்.02

கிழக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 622 பேர் உயிரிழந்த நிலையில் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், அங்கு மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் இடிபாடுகளிலிருந்து காயமடைந்தவர்களை ஹெலிகொப்டர்கள் உதவியுடன் பாதுகாப்பாக மீட்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் சுமார் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக தலிபான்களால் நடத்தப்படும் ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்த நாட்டு மருத்துவமனைகளின் புள்ளிவிவரங்களின் படி 400இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் பலர் உயிரிழந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பணிகளில் அந்த நாட்டு மீட்புப் பணியினரும் மருத்துவத்துறையினரும் இணைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(அ)

# ஓய்வூதியம் இரத்து செய்யும் யோசனையை எதிர்ப்பதற்கு முன்னாள் எம். பிக்கள் தயார்!

கொழும்பு, செப். 02

தங்கள் ஓய்வூதியத்தை இரத்து செய்யும் நோக்கில் முன்கொணரப்படும் யோசனையை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டபூர்வமாக எதிர்க்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்து செய்வதை நோக்கமாகக் கொண்ட வரைவு யோசனை, தற்போது, சட்டமாஅதிப ரின் பரிசீலனையில் உள்ளது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 500 பேரும், கணவர்மாரை இழந்த 150 பெண்களும் பாதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சராசரியாக, ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இறந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் மனைவியருக்கு ஓய்வூதியத்துக்காக மாத்திரம், அரசாங்கம் மாதத்திற்கு சுமார் 27 மில்லியன் ரூபாயை செலவிடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஓய்வு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படுமானால், ஒரு தொகை நிதியை சேமிக்கமுடியும்.

எனினும், இது நாட்டை நேசிக்கும் பல படித்த மற்றும் அர்ப்பணிப்புள்ளவர்கள், அரசியலில் நுழைவதைத் தடுக்கும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மரக்கறி விலையில் வீழ்ச்சி

கொழும்பு, செப். 02

பொருளாதார நிலையங்களில் மரக்கறிகளின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சில மரக்கறி வகைகளில் ஒரு கிலோவின் மொத்த விலை 50 முதல் 70 ரூபாய் வரை குறைந்துள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொருளாதார நிலையங்களில் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை இன்னும் குறைந்த விலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குகளுக்கு அரசாங்கம் வரி விதித்துள்ள போதிலும், நாட்டில் உருளைக்கிழங்கு கையிருப்பு இருப்பதால் விவசாயிகள் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# லாப் காஸ் விலை திருத்தம் இல்லை!

கொழும்பு, செப். 02


2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திற்கான லாப் எரிவாயுவின் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்போவதில்லை என லாப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதமும் லாப் எரிவாயு சிலிண்டரின் விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

இறுதியாக கடந்த ஏப்ரல் மாதத்தில்தான் லாப் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். மறைமுகப் பிரச்னைகள் வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**

சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். உத்தியோகத்தில் ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**

புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**

பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**

கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். விலகி நின்றவர்கள் வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு.

**துலாம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**தனுசு**

எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தை யும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**கும்பம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழையவாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**

கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தொழிலில் லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

# அநுர அரசாங்கம் காத்திரமான ஒரு முடிவை எடுக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 02

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் இடம்பெறவில்லை. இது தொடர்பில் அரசாங்கம் காத்திரமான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.


யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அபிவிருத்திப் பணிகள் ஒரு பக்கத்தில் வரவேற்கக்கூடிய வகையில் இருந்தாலும் கூட ஜனாதிபதி அநுரகுமாரவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியமான விடயம் ஒன்று சொல்லப்பட்டிருந்தது. மாகாண சபை தேர்தலைகளை நடத்துவது தொடர்பாக சொல்லப்பட்டிருந்தாலும் இன்று வரை அதை நடத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் இடம்பெறவில்லை.

செம்மணி மனிதப்புதைகுழி விடயம் என்பது ஒரு இனப்படுகொலையின் அழிக்க முடியாத சாட்சியமாக இருக்கிறது. எந்தவொரு அரசாங்கமும் தனது இராணுவத்தினரை பாதுகாப்பதில் குறியாக உள்ளனர். ஆகவே, இவர்கள் ஊடாக உள்நாட்டில் நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி நிச்சயமாக நீதியைப் பெறமுடியாது.

ஆகையால் தான் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் திரண்டு கையெழுத்து போராட்டம் ஒன்றை நடத்தி சர்வதேச நீதிப் பொறிமுறையை விரும்புகின்றார்கள். ஆகவே ஜனாதிபதி சர்வதேச நீதிப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்- என்றார். (எ)



# தனிநாயகம் அடிகளாரின் 45ஆவது நினைவு தினம்

வவுனியா, செப். 02

தமிழ்ப் பெரியார் தனிநாயகம் அடிகளாரின் 45ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுக் காலை வவுனியா மாநகர சபை ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாநகர சபை முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (எ-10)





# கோப்பாய் மற்றும் சாவகச்சேரிக்கு புதிய பிரதேச செயலாளர் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 02

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்ட ஈ. தயாரூபனும் சாவகச்சேரி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட எவ். சி. சத்தியசோதியும் நேற்றைதினம் காலை 08. 30 மணியளவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டனர்.

இந்த நிலையில், நேற்றைய தினமே கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலாளர்கள் தமது கடமையை பொறுப்பேற்றனர். (எ)

## திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணம், அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 21 எதிர்வரும் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் ச. நவநீதன் நிகழ்த்தும் "விருத்த குமார பாலராண படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## நீர்வேலியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமிகோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 37ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "எதிர்கொள் படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் மீதான தடையை நீக்குகின்றது ஐ. தே. க.?

கொழும்பு, செப். 02

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச்சென்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பலர்மீது விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின்பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இந்த நடவடிக்கை ஒற்றுமையை நோக்கி எடுக்கப்பட்ட முதல் படி என ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. இதனிடையே ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு சகல கட்சிகளை சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ , மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஆசனப்பட்டி கட்டாயம்!

கொழும்பு, செப். 02

நேற்று திங்கள்கிழமை முதல் அதிவேக நெடுஞ்சாலைகளில் பஸ்களில் பயணிக்கும் பயணிகள் சீட் பெல்ட் (ஆசனப் பட்டிகள்) அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட முடிவை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய வீதிகள் பாதுகாப்புச் சபை தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்தார்.

எனினும், தற்போது ஆசனப் பட்டிகள் பொருத்தப்படாத சில வாகனங்களில் அவற்றைப் பொருத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 31 அன்று, அதிவேக நெடுஞ்சாலை பஸ்களில் பயணிப்பவர்கள் சீட் பெல்ட் அணிவதை கட்டாயமாக்கும் விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதற்கிடையில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரும், சபைத் தலைவருமான பிமல் ரத்நாயக்க, இந்த முயற்சி "கிளீன் சிறீலங்கா" திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக செயல்படுத்தப்படுகிறது என்று விளக்கினார். (அ)

# வெளிநாட்டில் வேலை செய்வோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்

கொழும்பு, செப். 02

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற தொழிலாளர்களின் பிள்ளைகளின், பாடசாலைக் கல்விக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் தொழிலாளர்களின் 84 பிள்ளைகளுக்கு 2,655 மில்லியன் ரூபாய் பெறுமதியான புலமைப்பரிசில்கள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற 17 மாணவர்களுக்கு தலா 25,000 ரூபாவும், க.பொ.த. சாதாரண தரப் தேர்வில் தேர்ச்சி பெற்ற 45 மாணவர்களுக்கு தலா 30,000 ரூபாவும், உயர்தர தேர்வில் தேர்ச்சி பெற்ற 22 மாணவர்களுக்கு தலா 40,000 ரூபாவும் வழங்கப்பட்டன. (அ)

# 3 பெண்கள் துஷ்பிரயோகம் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

## மற்றொருவர் தப்பியோட்டம்

கொழும்பு, செப். 02

பொரளையில் உள்ள மசாஜ் நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அங்கு பணிபுரியும் 3 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு தப்பிச் சென்ற 2 பொலிஸ் கான்ஸ்டபிள்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பொலிஸ் சிறப்பு பணியகத் தலைமையகத்தில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர், குறித்த இடத்திலிருந்து தப்பிச்செல்ல முற்பட்டபோது, மேல் மாடியிலிருந்து கீழே விழுந்து காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அவர் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

மேலும் சம்பவத்தில் தப்பியோடிய நபர், பொலிஸ் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட ஒரு கான்ஸ்டபிள் என விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# ஜெனிவாவில் சவாலை சமாளிக்க வியூகம் வகுக்கின்றது அநுர அரசு!

## முக்கிய சந்திப்புகளில் விஜித ஹேரத்



கொழும்பு, செப். 02

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு ஜெனிவா பறப்பதற்கு முன்னர் கொழும்பில் முக்கியத்துவமிக்க சந்திப்புகளை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நடத்தவுள்ளார் என தெரியவருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் தூதுவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என அறியமுடிகின்றது.

இதன்போது உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நகர்வுகள் பற்றி அவர் விளக்கமளிக்கவுள்ளார்.

அத்துடன், உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்பை அவர் கோரவுள்ளதுடன், ஜெனிவாவில் இது குறித்து ஆதரவு வழங்குமாறும் கோரவுள்ளார் என தெரியவருகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்குரிய ஏற்பாடு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீட்டு பணியகம் என்பவற்றை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் பற்றியும் தெளிவுபடுத்தப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது. இதன்போது இலங்கை தொடர்பில் புதிய தொரு தீர்மானம் முன்வைக்கப்படவுள்ளது.

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் உள்ளக பொறிமுறையை ஏற்கும் நிலைப்பாட்டிலும், வெளியக பொறிமுறையை நிராகரிக்கும் தீர்மானத்திலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியாக உள்ளது. (அ)

# வென்னப்புவ துப்பாக்கிச்சூடு இருவர் கைது!

கொழும்பு, செப். 02

வென்னப்புவ பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கார், துப்பாக்கி மற்றும் வாள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேவா சாலைப் பகுதியில் நேற்று முன் தினம் காலை மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு குழு, மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை மோதிவிட்டு, பின்னர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். (அ)

# வீடொன்றில் இருந்து இருவர் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 02

பசறை - பதுளை பிரதான வீதியில் 9ஆம் கட்டை பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடொன்றினுள் இருந்து நேற்று முன் தினம் மாலை ஆண்கள் இருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பொல பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 28 வயதான இருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றுக்கு சென்ற சிறுவனொருவன் ஜன்னல் வழியாக வீட்டினுள் எட்டி பார்த்த போது, இருவர் கீழே விழுந்து கிடப்பதை கண்டு அயலவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

துரிதமாக செயற்பட்ட அயலவர்கள் 1990 எனும் அவசர அம்புலன்ஸ் சேவையை அழைத்துள்ளனர். இதனையடுத்து குறித்த இடத்திற்கு அம்புலன்ஸ் வண்டியில் வந்த ஊழியரொருவர் இரு ஆண்களையும் சோதித்துப் பார்த்ததில் இருவரும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து பசறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட இருவரும், கம்பொலை பகுதியில் உள்ள தனது உறவினர் வீடொன்றுக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு அவர்களது வீட்டுக்கு மேற்பகுதியில் அமைந்துள்ள புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடொன்றுக்கு சென்று அங்கு போதை பாவனையில் ஈடுபட்டிருக்கலாம் எனவும், போதை அதிகரித்தமையே உயிரிழப்பிற்கு காரணமாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# பாதாள உலகக் குழுக்களை மிகவிரைவில் அடக்குவோம்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, செப். 02

அரசியல்வாதிகளுக்கும், பாதாள குழுக்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு.

கைது செய்யப்பட்டவர்களிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

பாதாள குழுக்களை வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டு வருவோம் என நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கிறோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கெஹெல்பத்தரே பத்ம, கொமாண்டர் சலிது உள்ளிட்ட பாதாள குழுவினர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் பிரதான நபர்களாக செயற்பட்ட கெஹெல்பத்தரே பத்ம, கொமாண்டர் சலிது உட்பட குற்றவாளிகள் ஐந்து பேரை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளோம்.

குற்றப்புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாதுகாப்பு தரப்பினர் எவ்விதமான அரசியல் தலையீடு மில்லாமல் செயற்பட்டதன் காரணமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்துடன் தான் பாதாளக் குழுவினர்கள் செயற்பட்டனர்.

அரசியல்வாதிகள் தங்களின் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக பாதாளக் குழுக்களை பயன்படுத்திக் கொண்டனர்.

அரசியல்வாதிகளுக்கும், பாதாள குழுக்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு.

பாதாள குழுக்களை வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டு வருவோம் என நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கிறோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் நாட்டிற்காக எதையும் செய்யவில்லை

**அம்பாறையில் சஜித் சாடல்**

கல்முனை, செப். 02

**இந்த அரசாங்கம் நாட்டிற்காக எதையும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

இன்று நம் நாட்டின் நிலைமை சோகமானதும் துரதிர்ஷ்டவசமானதுமாகவே காணப்படுகின்றது. நாட்டு மக்களுக்கு பல எதிர்பார்ப்புகளை வழங்கி, மக்களை ஏமாற்றி, பொய்யால் வெற்றி பெற்று, இன்று நாட்டின் 2. 2 மில்லியன் மக்களை விரக்தியில் ஆழ்த்தியுள்ளனர். புற்றுநோய் மருத்துவமனையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவோ?, மருந்துப் பற்றாக்குறையைத் தீர்க்கவோ முடியாது போயுள்ளது. ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இதனால், புத்திசாலிகள் வெளியேற்றம் சார் பிரச்னை எழுகிறது. இதற்கும் எந்தத் தீர்வும் இல்லை. மேலும், நாட்டின் அபிவிருத்திப் பயணத்தை விரைவுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்



படவில்லை. தொலைநோக்குப் பார்வை இல்லாத ஒரு அரசாங்கத்தால் நாடு ஆளப்படுகிறது என்றும் சஜித் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அம்பாறை மாவட்டத்தில் இம்முறை புதிதாக தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் அம்பாறை நகரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அறுகம்குடாவில் கைகலப்பு

# கைதான இரு இஸ்ரேல் பிரஜைகளுக்கு பிணை

பொத்துவில், செப். 02

அம்பாறை மாவட்டம், அறுகம்குடா பகுதியில் ஹோட்டல் உரிமையாளர் மற்றும் அவரது மனைவியைத் தாக்கியதாகக் கூறி கடந்த வெள்ளிக்கிழமை பொத்துவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு இஸ்ரேலிய பிரஜைகள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தம்பதியினர் தங்கள் வாகனத்தில் பயணித்தபோது, 26 வயதுடைய இரண்டு வெளிநாட்டினர் வீதியை மறித்துள்ளனர். இதன்போது, இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட பின்னர் அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதில், பாதிக்கப்பட்ட கணவன் மற்றும் மனைவி காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சனிக்கிழமை பொத்துவில் நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டு ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களின் கடவுச்சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் நீதிவான் உத்தரவிட்டார். மேலும் இந்த வழக்கு நாளை புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# மண்டூர் முருகன் ஆலயத்தில் பணம் திருடிய பெண் கைது

மட்டக்களப்பு, செப்.02

மட்டக்களப்பு, மண்டூர் முருகன் ஆலயத்தில் பெண் ஒருவரின் 20 ஆயிரம் ரூபாய் பணத்துடன் இருந்த பணப்பையை திருடிய பெண் ஒருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற மண்டூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் இடம்பெற்ற நிலையில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பணப்பையை திருடிய பெண் ஒருவரை ஆலய பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

இதன்போது திருட்டுப்போன கைப்பையும் அதிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், திருட்டில் ஈடுபட்ட பெண்ணிடமிருந்து மேலதிகமாக 65 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர். (எ)

# ஒரு வாரத்தில் 3 சிறுமிகள்மீது பாலியல் துஷ்பிரயோகம்

**இருவர் கர்ப்பம், இருவர் கைது**

மட்டக்களப்பு, செப். 02

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரு பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஒரு வார காலத்தில் மூன்று சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதில் 13 மற்றும் 17 வயதுடைய இரு சிறுமிகள் கர்ப்பமாகியுள்ளதாகவும் இரு ஆண் சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அந்தந்த பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்திலுள்ள ஒரு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில், சில தினங்களுக்கு முன் 17 வயது சிறுமி ஒருவர் வாந்தியெடுத்ததை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர் மூன்று மாத கர்ப்பிணியாக இருப்பது மருத்துவர்களால் கண்டறியப்பட்டது.

இதே பொலிஸ் பிரிவில், 13 வயது சிறுமி ஒருவரை மூன்று மாத கர்ப்பமாக்கிய 17 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மற்றொரு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் 15 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதை அடுத்து 17 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.(எ)

# சுற்றுலா பேருந்துகளின் ஒலி - ஒளி பாதிப்பை கட்டுப்படுத்த கோரிக்கை

நுவரெலியா, செப். 02

நுவரெலியாவுக்கு சுற்றுலா நிமிர்த்தம் வரும் பேருந்துகளின் போக்குவரத்து விதிமீறல்களால் அதிக ஒலி, ஒளி காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இரவு நேரங்களில் நுவரெலியா கிரகரி வாவிக் கரையோரம் உள்ளிட்ட சில சுற்றுலாப் பிரசித்தி பெற்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் பேருந்துகள் நவீன வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டு விபத்துகள் ஏற்படக்கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ள அபாயகரமான மேலதிக உதிரிப் பாகங்களைக் கொண்டு பலநிறங்களில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.




அத்துடன் அதிரும் அதிக சத்தமாக பாடல்கள் ஒலிபரப்பட்டு தங்களுடைய பொழுதுகளை கழிக்கின்றனர். இதில் அதிக ஓசையை எழுப்பக்கூடிய ஒலி பெருக்கிகளை (ஹோர்ன்கள்) பயன்படுத்தி வருகின்றனர்.

இது குறித்து பொலிஸாரோ அல்லது போக்குவரத்து விதிமீறல்களை கண்காணிக்கும் அதிகாரிகளோ கண்டுகொள்வதில்லை என பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

(எ)



# விநாயகர் சிலை ஊர்வலம்

நுவரெலிய, செப். 02

ஆவணி சதுர்த்தி ஆன்மீக எழுச்சி ஊர்வலம் நேற்று முன்தினம் நுவரெலிய- கொட்டகலை பகுதியில் நடைபெற்றது. பத்து இடங்களிலிருந்து விநாயகர் சிலைகள் கரைப்பதற்காக கொண்டுவரப்பட்டன.

இந்து சமய கலாசார அமைச்சு ஏற்பாடு செய்த இந்த ஆன்மீக எழுச்சி ஊர்வலமானது, கொட்டகலை பெரிய மண்வெட்டி தோட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு கொட்டகலை பிரதேசசபைக்கு அருகாமையிலிருந்து ஹற்றன் - கொட்டகலை பிரதான வீதியின் ஊடாக நடைபெற்றது.

இந்த விநாயகர் சிலை ஊர்வலத்தின் போது காவடி, கோலாட்டம், கும்மி போன்ற பல்வேறு கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 15 சிலைகளும் கரைக்கப்பட்டன. இதன்போது பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

# மர்மமான முறையில் உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலம் மீட்பு

பதுளை, செப். 02

பதுளை, பசறை 10ஆவது கனவா பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் மர்மமான முறையில் உயிரிழந்த இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

பசறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே குறித்த இரு சடலங்களும் மீட்கப்பட்டன.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 28 மற்றும் 33 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# புனித மரியாள் தேவாலயம் திறப்பு

கொத்மலை, செப். 02

நுவரெலியா தவலந்தென்ன கொத்மலை பிரதேசத்தில் புனித மரியாள் தேவாலயம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தவலந்தென்ன, கொத்மலை புனித மரியாள் தேவாலய பங்கு தந்தை கிளைமன் ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டி மறை மாவட்ட வேலன்ஸ் மெண்டிஸால் தேவாலயம் திறந்து வைக்கப்பட்டது.



இதில், அனைத்து மாவட்டங்களில் உள்ள பங்கு தந்தையர்கள் மற்றும் பிரதேச மக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி மனித புதைகுழி குறித்து...

வாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்திய அலுவலகத்திலிருந்து சேவைகளைப் பெறும் வசதியை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

ஓர் அடையாள ரீதியாக குடிவரவு மற்றும் குடியகல்வு அனுமதிகளை வழங்குவதற்காக இது இருந்தபோதிலும், அதனை விட பாரிய நோக்கத்துடன் இந்தப் பணியில் நாம் தலையிட்டுள்ளோம். எமது முழு நிர்வாக அமைப்பும் கொழும்பை மையமாகக் கொண்டுள்ளது. தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல பணிகளுக்காக கொழும்புக்குச் செல்லவேண்டியுள்ளது.

இந்த நிர்வாகத்தை தொலைதூர கிராமங்களுக்கு பரவலாக்குவதே எமது அரசாங்கத்தின் குறிக்கோள். அரசாங்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணிகளை தமக்கு மிக நெருங்கிய வகையில் பெற்றுக்கொள்ள வசதிகள் உருவாக்கப்படவேண்டும்.

அடுத்த ஆண்டுக்குள் கணினி மென்பொருள் அமைப்புகள் மற்றும் உங்கள் தொலைபேசி மூலம் அரசாங்கத்துடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் மக்கள் மேற்கொள்ளக் கூடிய வகையில் வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். எமது அரசாங்கத்தின் முதன்மையான செயற்பாடு டிஜிற்றல் மயமாக்கல் ஆகும். மேலும், அரச சேவையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் அன்றைய தினம் நடைபெற்ற மாவட்டக் குழுக் கூட்டத்தில் ஏப்ரல் மாதம் கணிசமான அளவு சம்பள உயர்வை வழங்குவோம் என்று அறிவித்தேன். நாங்கள் அதைச் செய்தோம். எஞ்சியுள்ள பகுதியை அடுத்த ஜனவரியில் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு வலுவான அரச சேவை அவசியம். முன்னேறிய ஒவ்வொரு நாட்டிலும் வலுவான அரச சேவை உள்ளது. நமது நாட்டில் ஒரு வலுவான அரச சேவையை நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

மேலும், உங்கள் கையொப்பத்திற்கு ஒரு சக்தி உண்டு. அந்த கையொப்பம் மக்களுக்கு சேவை செய்ய பயன்படுத்தப்பட்டால், நாங்கள் உங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

ஆனால், அந்த கையொப்பம் பணத்திற்காக பயன்படுத்தப்பட்டால், சட்டம் அமுல்படுத்தப்படும். நம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் ஒரு அரசு நமக்குத் தேவை. நமது நாடு சட்டம் காட்டுமிராண்டித்தனமான ஒரு நாடாகவும், அரச நிறுவனங்களின் கௌரவம் அழிக்கப்பட்ட நாடாகவும் மாறியிருந்தது.

மீண்டும் ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் கௌரவம் நிலைநிறுத்தப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு அரச அதிகாரிக்கும் கௌரவத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக, அந்த நிறுவனங்களுக்கு நாம் வசதிகளை வழங்கி வருகிறோம்.

நமது நாட்டை புதிதாகக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்த வடமாகாணத்திற்கு எம்மிடம் பாரிய அபிவிருத்தி திட்டம் உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில், வடக்கின் மக்கள் முதல் முறையாக அரசாங்கத்தை அமைக்க வாக்களித்தனர்.

பிளவுபட்டு, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை கொண்டிருந்த ஒரு நாடு, அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்தது. இப்போது நாம் செய்ய வேண்டியது, இந்த ஒன்றிணைவு வீழ்ச்சியடைய இடமளிக்காமல், அதை வலுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றன என்பதை நாம் அறிவோம். இன்று வடக்கு மற்றும் தெற்கிலும் இதே நிலை காணப்படுகிறது.

வடக்கிலோ அல்லது தெற்கிலோ மேற்கொள்ளப்படும் இந்த இனவாத அரசியல் மக்களுக்காக அன்றி அரசியல்வாதிகளுக்காகவே மேற்கொள்ளப்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, வடக்கு மற்றும் தெற்கில் உள்ள நாம் அனைவரும் இந்த இனவாத அரசியலை நிராகரிக்க வேண்டும். இனவாதம் மீண்டும் எங்கும் தலை தூக்க அனுமதிக்கக்கூடாது. இதற்காக நாங்கள் மிகவும் கடினமாக உழைத்து வருறோம்.

அரசாங்கமென்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் நாட்டில் மீண்டும் ஒரு போர் வராது என்று நாங்கள் நம்புகிறோம். யுத்தம் ஒன்று வரும் என்ற சிந்தித்து சிலர் செயற்பட்டார்கள் . மீண்டும் ஒரு போர் நடக்காமல் தடுக்க நாங்கள் உழைத்து வருகிறோம். மக்களுக்கு முடிந்தவரை காணிகளை வழங்க வேண்டும். மூடப்பட்ட வீதிகளைத் திறக்க வேண்டும். நாம் ஒருவரையொருவர் சந்தேகிக்கக்கூடாது.

மற்றொரு போரைத் தடுக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த மனநிலையுடன் நம் நாட்டைப் பார்க்க வேண்டும். நமது நாட்டை ஒரு புதிய சமூகத்தை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். பழைய தோல்வியுற்ற அரசியல் இயக்கங்கள், மதவாதம் மற்றும் சாதிவாதம் என்பவற்றைப் பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒரு நூற்றாண்டுக்கும் முந்திய காலத்திற்குரியவை. இன்று, இனம், மதம், சாதி அல்ல, மனிதநேயம் தான் பிரதான காரணி. எனவே, அனைத்து பிளவுகளும் மனிதநேயத்திற்கு அடிபணிய வேண்டும். மனிதநேயத்தை அனைத்தையும் விட உயர்வாக கருதும் ஒரு நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதுதான் நம் நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலமாகும்.

மண்ணைத் தோண்டும்போது, பழைய எலும்புக்கூடுகள் வெளிப்படுகின்றன என்பதை நான் அறிவேன். இப்போது, செம்மணி பகுதியில் உள்ள புதைகுழிகள் குறித்து மிகவும் வெளிப்படையான விசாரணையை நடத்தி வருகிறோம், இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற புதைகுழிகள் மீண்டும் உருவாகாத நாட்டை உருவாக்குவதே எங்கள் எதிர்பார்ப்பாகும்.

தற்சமயம், நம் நாட்டிற்கு அவசியமானவற்றை நாம் செய்து வருகிறோம். நமது மதத் தலைவர்கள், அரசியல் அதிகாரம், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பிரதிநிதிகள், நாம் அனைவரும் ஒரே குறிக்கோளுடன் செயல்படுவோம். அரசியல் அதிகாரம் என்ற வகையில் நம் தரப்பில் இருந்து நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். இந்த நாட்டை நாம் அனைவரும் ஒன்றாகக் கட்டியெழுப்புவோம்-என்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர், இராமலிங்கம் சந்திரசேகர் , பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க,பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சமிந்த பதிராஜ, யாழ் மாவட்ட செயலாளர் எம். பிரதீபன் மற்றும் அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதிநிதிகள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## கருத்தியல்...

இந்நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்து, நாட்டு மக்களுக்கு உயிர் பயமின்றி வாழ்வதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்திய படையினர் மீண்டும் வேட்டையாடப்படுகின்றனர்.

புலிகள் அமைப்பு, கட்டமைப்பு ரீதியாக தோற்கடிக்கப்பட்டாலும் அதன் பிரிவினைவாத கருத்தியல் இன்னும் முடியவில்லை.

பயங்கரவாதிகளுக்காக (புலிகள்) சர்வதேசத்தில் நினைவகம் அமைக்கப்படுகின்றது. ஆனால், படையினருக்கு அமைத்தால் அதனை இனவாதமாக காட்ட முற்படுகின்றனர்.

முன்னாள் கடற்படை தளபதியொருவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். அடையாள அணிவகுப்பில் புலி உறுப்பினர் ஒருவரே சாட்சியமளித்துள்ளார். இப்படியான நிலை வருமென அந்த கடற்படை தளபதி நினைத்தும் பார்த்திருக்கமாட்டார். இப்படியான நிலைமையே இங்கு நிலவுகின்றது. எமது நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படையினரை நாம் காக்கவேண்டும் - என்றார். (அ)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், நேற்று 40ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை கட்டம் கட்டமாக இதுவரை 49 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின்போது, நேற்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்ட 07 எலும்புக்கூட்டு தொகுதியுடன் இதுவரை 198 எலும்பு கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 218 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மதகுருமார்...

மயிலிட்டி நிகழ்வுக்கு பௌத்த மதகுரு சார்பில் தையிட்டி விகாரதிபதியை அழைக்க நேரிட்டால், அது விமர்சனங்களை ஏற்படுத்தும் என்பதால், நிகழ்வில் எந்த மதகுருமாரையும் அழைக்காது விடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறியே, நிகழ்வுக்கு மத குருமார்களை வரவேண்டாம் எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

## யாழில் மின்...

நூலகம், ஆசியாவிலேயே மிகப்பெரிய புத்தகங்களின் தொகுப்பைக் கொண்ட நூலகமாகும்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், உள்ளூர், வெளிநாட்டு ஆய்வாளர்கள் உட்பட ஏராளமான மக்களால் தினமும் பயன்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் ஸ்மார்ட் அட்டை பிரவேச வசதி மற்றும் விசேட தேவை உள்ளவர்களுக்கு உதவி தொழில்நுட்பத்துடன் கூடிய விசேட அலகும் இதன் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

2025 வரவு-செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழில் சர்...

சுனில் குமார கமகே, கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ஜெ. ரஜீவன், ச.சிறிபவானந்தராஜா வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் கிரிக்கெட்டின் மேம்பாட்டிற்கும், இளம் வீரர்களுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இந்த மைதானம் முக்கிய பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## ஒன்றுகூடிய...

உரிமையாளர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என அனைவரும் அப்பகுதியில் நிற்க விடாமல் விரட்டியடிக்கப்பட்டனர்.

பொலிஸார், வயோதிபர்கள் எனவும் பாராது போராட்டக்காரர்களை முதுகில் பிடித்து தள்ளினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கச்சதீவு...

ஊர்காவற்றுறையில் இருந்து கடற்படையினரின் 4 படகுகளில் கச்சதீவுக்கு பயணமானார். கச்சதீவைப் பார்வையிட்ட ஜனாதி பதி மாலை 6 மணிக்கு மீண்டும் யாழ்ப் பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்தார். (அ)

## வடக்கில்...

போதே ஜனாதி பதி இதனைக் கூறினார்.

கடந்த அரசாங்கங்கள் போரை எதிர்பார்த்து பணியாற்றிய போதிலும், இந்த நாட்டில் மீண்டும் எந்த விதமான யுத்தமும் ஏற்படாத வகையில் நாட்டில் அமைதியையும் நல் லிணக்கத்தையும் கட்டி யெழுப்ப தற்போதைய அரசாங்கம் பாடுபடுவதா கவும், கடந்த போரின் போது படையினரின் பயன்பாட்டுக்காக கையகப்படுத்தப்பட்ட வடக்கில் விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளும் மக்களுக்காக விடுவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## ரயில் விபத்தில்...

குறித்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றது. கொழும்பில் இருந்து யாழ். நோக்கி பயணித்த ரயில், வவுனியா - மன்னார் பிரதான வீதியில் உள்ள பாதுகாப்பு கடவையில் சென்றுகொண்டிருந்தபோது வீதியால் பயணித்த பட்டா வாகனத்தை மோதித்தள்ளியது.

விபத்தில் வாகனத்தில் பயணித்த கணவன்,மனைவி அவர்களின் 4 வயது குழந்தை ஆகியோர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த விபத்து சமிக்ஞையில் ஏற்பட்ட கோளாறால் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விபத்துஇடம்பெற்ற கடவையில் ஊழியர் ஒருவர் 24 மணி நேரமும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். வழமையாக அந்த கடவையூடாக ரயில் செல்லும் போது மூடப்படுகின்ற பாதுகாப்புக் கதவு நேற்று மூடப்படாமையினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது. (அ)

## மகிந்தவை...

தலைவர்களுக்கும் தேசிய வளர்ச்சிக்கான தெளிவான தொலைநோக்கு பார்வை இல்லை.

சர்வதேச தலைவர்களை ஒப்பிடுகையில், அவர்கள் ஊழலுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள்.

2010 ஆம் ஆண்டு ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுக்கு அரசு மேற்கொண்ட பயணத்தின்போது, 65 பேர் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் அதிகாரபூர்வமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளை நாம் மன்னிக்கவில்லை. அதிகாரிகளை பொறுப்புக்கூற வைப்பதில் தற்போதைய அரசின் செயல்பாட்டை ஆதரிக்கிறேன்.

ரணில் விக்கிரமசிங்க செய்தது சரி என்று நான் கூறவில்லை. அவரது தலைவிதியைப் பார்ப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். ஆனால் இந்த விஷயத்தில், இந்த அரசாங்கம் அமைத்த முன்னுதாரணத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த முன்னுதாரணத்தின் அடிப்படையில், ராஜபக்ஷ போன்ற ஒருவருக்கு சுமார் 400 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, செப். 02

எரிபொருள் விலைகள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டபோ திலும், பஸ் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படாது என தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு உறுதிப்படுத்தி யுள்ளது.

புதிய எரிபொருள் விலைகள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

அதன்படி, ஒட்டோ டீச லின் விலை லீற்றருக்கு ரூ.6 குறைந்து ரூ.283 ஆகவும், சூப்பர் டீசல் லீற்றருக்கு ரூ.12 குறைந்து ரூ.313 ஆகவும் இருக்கும்.

92 ஒக்ரேன் ரக பெற்றோல் விலையும் லீற்றருக்கு ரூ.6 குறைந்து ரூ.299 ஆக இருக்கும்.

அதேநேரம், 95 ஒக்ரேன் ரக பெற்றோல் மற்றும் மண் ணெண் ணெய் விலைகளில் மாற்றம் மேற் கொள்ளப் படவில்லை. (அ)

## ராஜித, நிமல் லான்சாவுக்கு வீட்டில் இருந்து உணவுவகை

கொழும்பு, செப். 02

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் நிமல் லான்சா ஆகியோருக்கு வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட உணவுகளை உட்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இருவரினதும் முறையான கோரிக்கைக ளுக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க தெரி வித்தார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டு இடம்பெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பயங்கரவாத சட்டம் இரத்தாகினால் குற்றவாளிகளும் விடுவிக்கப்படுவர்!

### பிரதீபா மஹாநாம ஹேவா எச்சரிக்கை

கொழும்பு, செப். 02

பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது என சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.


புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இந்த மாதத்தில் வரைவு செய்யப்படும் என இது தொடர்பில் ஆராய்ந்து புதிய சட்டமூலம் தயாரிக்க அமைக்கப் பட்ட குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது. அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்படும் அதே நேரத்தில், திட்டமிடப்பட்ட குற்றச் சட்டத்தை யும் முன்னிலைக்கு கொண்டுவரவேண்டும்.

திட்டமிடப்பட்ட குற்றம் மற்றும் போதைப்பொ ருள் கடத்தலைத் தடுப்பதில் இந்தச் சட்டம் மிகவும் முக்கியமானது. அதனால் பயங்கரவாத தடைச்சட் டத்தை நீக்கும், அதேநேரம் திட்டமிடப்பட்ட குற்றங் கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்-என்றார். (அ)

# இந்திய நிதி அமைச்சருடன் மிலிந்த மொரகொட பேச்சு!

### முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு



கொழும்பு, செப். 02

பாத் பைண்டர் பவுன்டேஷனின் ஸ்தாபகரும், டில்லிக்கான இலங்கை யின் முன்னாள் தூதுவ ருமான மிலிந்த மொரகொட இந்திய நிதி யமைச் சர் நிர்மலா சீதாராமை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தியத் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாட்டின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

சர்வதேச பொருளாதாரத்தை தற்போது பாதிக்கும் நிலைமைகள் மற்றும் இடையூறுகள், தெற்காசி யாவில் அவற்றின் தாக்கங்கள் குறித்து இந்த சந்திப்பு கவனம் செலுத்தியது.

கலந்துரையாடலின்போது, இந்த உலகளாவிய சவால்களுக்கு மத்தி யில் இந்தியப் பொருளா தாரத்தை நிலைப்படுத்துவதில் பிரதமர் நரேந் திர மோடி மற்றும் நிதியமைச்சர் சீதாராமனால் ஆற்றப்படும் தலை மைப் பங்குக்கு மொரகொட தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். (அ)

## அரசியல் கைதிகள் விடுதலை கோரி கனடாவில் விடுதலை நீர் சேகரிப்பு!



ஒன்ராறியோ, செப். 02

கனடா - ஒன்ராறியோ மாகாணத்தின், பிரம்டன் நகரத்தில் அமையப்பெற்றுள்ள தமிழின அழிப்பு நினைவக வளாகத்தில், "கனடிய தமிழர் தேசிய அவை" அமைப்பின் ஏற்பாட்டில், விடுதலைப் பெரு விருட்சத்திற்கான "விடுதலை நீர்" சேகரிப்பு நிகழ்வு உணர்வு பூர்வமாக இடம்பெற்றுள்ளது.

தமிழ் இனத்தினுடைய விடுதலை உட்பட தமிழ் அரசியல் கைதிகளின் விடியலுக்கான குறியீடாக, "குரலற்றவர்களின் குரல் அமைப்பினால்" முன்னெடுக்கப்பட்டுவரும் விடுதலை நீர் சேகரிப்பு செயற் கருமத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்த கவனம்தொடும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

"நிறைகுடம் சாய்த்து நீரதை வார்த்து சிறை வாடும் நம்மவரை உயிர்ப்புடன் மீட்டிட... தரை கிளரும் துளிர்தனை தல விருட்சமாக்கிடுவோம்...

தூய நீர் வார்த்து, புனிதமரம் வானம்தொட அணி திரண்டு எழுந்திடுவீர்..! " என்ற கோஷம் முழங்கிட நிகழ்வு எழுச்சிகோலம் பூண்டுள்ளது.

விடுதலை நீர் வார்ப்பதில் பிரம்டன் நகரபிதா உட்பட அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், புலம்பெயர் தமிழ் உறவுகள் எனப் பல தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## விமலுக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 02

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் /ஹுஸைன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, கொழும்பு, தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தை சுற்றி வீதிகளை மறித்து பொதுமக்க ளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் போராட்டம் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் நேற்று மீண்டும் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்த ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(அ)

## நன்றி தெரிவித்தார் ரணில்

கொழும்பு, செப். 02

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதிலிருந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வரை தனக்கு ஆதரவாக நின்ற அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், தான் கைது செய்யப்பட்ட தரு ணத்திலிருந்து சமூக ஊடகங்களில் தனக்கு ஆதரவாக நின்ற அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி அனைத்து தரப்பினரையும் பின்னர் சந்திக்க உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

### இலங்கையில் தமிழின அழிப்பு

# சுயாதீன விசாரணையை நடத்தக் கோரி பிரிட்டனில் ஈருருளிப் பயண போராட்டம்

லண்டன், செப். 02

இலங்கையில் திட்டமிட்டு தமிழின அழிப்பு நடத்தப்படுவது தொடர்பில் அனைத்துலக சுயாதீன விசாரணையை நடத்தக் கோரி, பிரித்தானியாவில் ஈருருளிப்பயணப் போராட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரி மைகள் பேரவையின் 60ஆவது கூட் டத்தொடர் எதிர்வரும் 08 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதனையொட்டியே இந்த போராட்டம் நடைபெறுகிறது.

அதற்கமைய, நெதர்லாந்து பிறேடா நகர சபைக்கு முன்பாக குறித்த மனிதநேய ஈருருளிப்பய ணம் ஆரம்பிக்கப்பட்டது.

நெதர்லாந்து சர்வதேச நீதிமன் றம், நெதர்லாந்து ரொத்தர்டாம் நகரசபை ஊடாக இந்த மனித நேய ஈருருளிப் பயணம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த மனிதநேய ஈருருளிப்பயணம் பெல்ஜியம் எல் லையைச் சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.